# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,517—1965 සැප්තැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්දා—1965.9.30

14,517 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]

## அரசாங்க அறிவித்தல்கள்

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவின் 7 ம் உபபிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள கட்டளைகள் என்னால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொழும்பு,
1965 ம் ஞூ செப்தம்பர் மீ 24 ந் உ.

எம். டி. பண்டா,
விவசாய, உணவுப் பகுதி அமைச்சர்.

#### அட்டவணை

| கட்டளையிட்ட தேதி | கட்டளையிடுவதற்கு யாரால் அதிகாரம் வழங்கப்பட்டது | கட்டளை எப்பொருளுக்கானது | எவ்வர்த்தமானப் பத்திரிகையில் கட்டளை பிரசுரிக்கப்பட்டது |
|---|---|---|---|
| 1965.8.3 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கேகாலை மாவட்டம் | உபஉணவுப் பொருள்கள் .. | 1965.8.7 தேதியைக் கொண்ட 14,473 இலக்கம் |
| ஷை .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), புத்தளம் மாவட்டம் | மாட்டிறைச்சி .. .. | ஷை |
| 1965.8.10 .. | உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மாத்தறை மாவட்டம் | உபஉணவுப் பொருள்கள்—மசூர்ப் பருப்பு | 1965.8.14 தேதியைக் கொண்ட 14,482 இலக்கம் |
| 1965.8.12 .. | பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), நுவரெலியா மாவட்டம் | மசூர்ப்பருப்பு .. .. | 1965.8.19 தேதியைக் கொண்ட 14,485 இலக்கம் |
| ஷை .. | ஷை .. .. .. | சர்க்கரை .. .. | ஷை |
| ஷை .. | ஷை .. .. .. | உபஉணவுப் பொருள்கள் .. | ஷை |
| 1965.8.26 .. | விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) .. .. | பால் உணவுகள் .. | 1965.8.27 தேதியைக் கொண்ட 14,492 இலக்கம் |

9–203

---

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இலக்கம் : எப்.சி/வி.எஸ்.எப். 1 (47) **உப உணவுப் பொருள்கள்**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு கொழும்பு மாவட்டத்துப் பிரதி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) ஆகிய எம்பமூர்த்தி சுந்தரமூர்த்தி ஆகிய நான் இக்கட்டளையால்—

(i) 1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ந் தேதி வெளியான 14,506 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரமான 1965 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ந் தேதியைக்கொண்ட எப்.சி/வி.எஸ்.எப். 1 (46) இலக்க விலைக்கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(ii) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச்சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உச்ச மொத்த விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் இதற்குள்ள அட்டவணையின் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே அவ்வட்டவணையின் 2 ம் பத்தியில் விஸ்தரிக்கப்பட்ட நிர்வாக மாவட்டங்களில் 1 ம் பத்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருள்களின் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத மொத்த அந்தரின் உடனேயே நடைமுறையாகும் மொத்த விலையாக விதிக்கிறேன்.

(iii) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச்சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உச்சச் சில்லறை விலையாக இப்போதைக்கெனக் குறிப்பிட்ட விலையுடன் 4 ம் பத்தியிற் குறிக்கப்பட்ட தொகையைக்கூட்டிய விலையையே குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட பொருள்களின் அவ்வட்டவணையின் 2 ம் பந்தியிற் குறிப்பிடப்பட்ட மாவட்ட எல்லைக்குள் அதற்குக்கூடிய விலைக்கு விற்றலாகாத நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன்.

(iv) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதற்குக்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகுமெனவும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(v) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் எவராவது விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட ஒரு பொருளின் சிறுதொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளையும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளும் ஆகக்கூடிய விலையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(vii) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோய் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன.

(viii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்வித விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(ix) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ந் தேதி பிற்பகல் 1 மணிக்கு கொழும்புக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. சுந்தரமூர்த்தி,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
கொழும்பு மாவட்டம்.

## அட்டவணை

| | பத்தி 1<br>பொருளின் விபரம் | பத்தி 2<br>இடப்பரப்பு அல்லது மாவட்டம் | பத்தி 3<br>கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட மொத்த வியாபாரிகளின் மொத்த அந்தர் ஒன்றுக்குக் கூட்ட வேண்டிய விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>கொழும்பு மாநகர எல்லைக்குட்பட்ட சில்லறை வியாபாரிகளின் இருத்தல் ஒன்றுக்குக் கூட்டவேண்டிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. | வெங்காயம் (சிறுவெங்காயம், சிக்பெலபூர் தவிர்ந்த ஏனைய எல்லா ரகங்கள்) .. | கொழும்பு மாவட்டம் (கொழும்பு மாநகர சபை எல்லையைத் தவிர்த்து) .. | 1 60 .. | 0 02 |
| 2. | உருளைக்கிழங்கு .. | .. | 1 60 .. | 0 02 |
| 3. | நற்சீரகம் .. .. | .. | 2 60 .. | 0 03 |
| 4. | மஞ்சள் .. .. | .. | 2 60 .. | 0 03 |
| 5. | கொத்தமல்லி .. | .. | 2 60 .. | 0 03 |
| 6. | முழு உளுந்து .. | .. | 2 60 .. | 0 03 |
| 7. | பாசிப்பயறு .. .. | .. | 2 60 .. | 0 03 |
| 8. | துவரம் பருப்பு .. | .. | 2 60 .. | 0 03 |
| 9. | கடலைப் பருப்பு .. | .. | 2 60 .. | 0 03 |
| 10. | சிந்தாமணிக் கடலை .. | .. | 2 60 .. | 0 03 |
| 11. | உள்ளி (பம்பாய்) .. | .. | 2 60 .. | 0 03 |
| 12. | புளி .. .. | .. | 2 60 .. | 0 03 |
| 13. | சர்க்கரை .. .. | .. | 2 60 .. | 0 03 |
| 14. | சின்னவெங்காயம் .. | — .. | 2 60 .. | 0 03 |

குறிப்பு.—இவ்விலைகள் பொருள்கள் விற்கப்படவேண்டிய குறிப்பிட்ட விலைகளல்ல ; இவை அவற்றிலும் பார்க்கக் கூடிய விலைக்கு விற்றலாகா உச்ச விலைகளாகும்.

9–176

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.